## ஜாலான் மஸ்ஜிட் இந்தியா ஆலய விவகாரத்தில் வழக்கறிஞர்களுக்கு

# என்ன வேலை!



சிப்பாங், மார்ச் 22-

ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் உள்ள தேவி ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலய விவகாரத்தில் ஒரு சுமுகமான தீர்வு காண முயற்சி நடந்து வரும் வேளையில் யாரும் இதை வைத்து ஹீரோ ஆக வேண்டாம் என பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் கேட்டுக் கொண்டார்.

பக்கம் 13

# யாரும் ஹீரோவாக முயற்சிக்க வேண்டாம்



முதல் பக்கத் தொடர்ச்சி

## யாரும் ஹீரோவாக முயற்சிக்க வேண்டாம்...

இந்த விவகாரத்திற்கு முற்றிலும் அமைதியான சுமுகமான முறையில் தீர்வுகாண முயற்சிகள் நடக்கின்ற வேளையில் யாரும் இதை வைத்து மிகப்பெரிய ஆளாக தங்களை காட்டிக் கொள்ள வேண்டாம் என்று அவர் கூறினார். இந்த விஷயத்தில் தேவையில்லாத சில வழக்கறிஞர்கள் சம்பந்தப்பட்டு இந்த ஆலயம் என்னவோ உடைக்கப்படுவது போல ஒரு தோற்றத்தை உருவாக்குகிறார்கள்.

பிரதமர் என்ற முறையில் எந்த ஓர் ஆலயமும் உடைக்கப்படுவதையோ மற்ற சமயங்களின் நடவடிக்கைகள் தடுக்கப்படுவதையோ நான் எப்போதும் விரும்பியதில்லை என்று நேற்று இங்கு சிப்பாங்கில் மஸ்ஜிட் சுல்தான் அப்துல் சமாட் பள்ளிவாசலில் வெள்ளிக்கிழமை தொழுகையில் கலந்துக் கொண்ட பிறகு அவர் பேசினார்.

அந்த இந்து ஆலயம் அமைந்திருக்கின்ற இடம் அரசாங்கத்திற்கு சொந்தமானது அல்ல. அது ஒரு தனியாருக்கு சொந்தமானது.கடந்த 2012ஆம் ஆண்டு முதல் அங்கு ஒரு பள்ளிவாசலை கட்ட முடிவு செய்திருக்கிறார்கள். அங்கு அமைந்துள்ள பழைமைவாய்ந்த அந்த ஆலயம் அவர்களின் நிலத்தில் அனுமதி இன்றி இருக்கிறது. எனினும் ஒரு சமயத்தின் நல்லிணக்கத்தின் அடையாளமாக அந்த ஆலயம் அங்கு இருக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கோலாலம்பூர் மாநகர மன்றம் அந்த ஆலயத்திற்கு ஒரு மாற்று இடத்தை அடையாளம் கண்டுள்ளது.பிரச்சினைகள் இன்றி இந்த விவகாரத்தை தீர்க்க அது முன்வந்துள்ளது. இஸ்லாமிய சமூகத்தினர் உட்பட சிலரின் அறியாமையற்ற அறிக்கைகள் இதில் தேவையில்லை என நான் கருதுகிறேன். அந்த பள்ளிவாசல் கட்டுப்படும் வரை இந்த கோயில் உடைக்கப்படாமல் இருக்கும் அதற்கு முறையான மாற்று இடம் வழங்கப்படும் என்றார் அவர்.

ஜெக்கல் குரூப் என்ற சம்பந்தப்பட்ட ஆலய நிர்வாகத்திற்கு இடையில் நேற்று முன்தினம் பேச்சுவார்த்தை நடந்தது. அதே போன்று கோலாலம்பூர் மேயர் மைமுனா முகமட் ஷாரிப் இந்த ஆலயத்திற்கு ஒரு மாற்று இடத்தை கண்டறிந்துள்ளார் என்றும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.